


# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் [illegible] அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

தூத்துக்குடி தெற்கு மாவட்டத்தில் உள்ள ஓட்டப்பிடாரம் மேற்கு ஒன்றியத்தில் தெருமுனைக் கூட்டம் முடிவடைந்துள்ள நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பகுதி–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 21.06.2025 | காயல்பட்டிணம் நகரம் | வள்ளல் சீதக்காதி திடல் | ச.த.பொன்னரசு<br>இள.கார்த்திக் |
| 2 | | சாத்தான்குளம் தெற்கு ஒன்றியம் | பொத்தக்காலன்விளை | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன்<br>இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 3 | | தூத்துக்குடி கிழக்கு ஒன்றியம் | சிலுவைப்பட்டி | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>கோ.சண்முகநாராயணன் |
| 4 | | அன்னை இந்திரா நகர் பகுதி | வீட்டுவசதி குடியிருப்பு அருகில் | வே.குழந்தைவேல்<br>மு.செந்தூர்பாண்டி |
| 5 | 22.06.2025 | உடன்குடி மேற்கு ஒன்றியம் | வேப்பங்காடு | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>மு.செந்தூர்பாண்டி |
| 6 | | கருங்குளம் கிழக்கு ஒன்றியம் | கலியாவூர் | ச.த.பொன்னரசு<br>இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 7 | | தூத்துக்குடி மத்திய ஒன்றியம் | அய்யனார்குளம் | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன்<br>கோ.சண்முகநாராயணன் |
| 8 | 23.06.2025 | ஆழ்வார்திருநகரி மேற்கு ஒன்றியம் | ஆழ்வார்திருநகரி | ச.த.பொன்னரசு<br>கோ.சண்முகநாராயணன் |
| 9 | | ஸ்பிக் நகர் பகுதி | ஸ்பிக் நகர் | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 10 | 24.06.2025 | ஆழ்வார்திருநகரி மத்திய ஒன்றியம் | கே.வி.கே.சாமி சிலை அருகில், நாசரேத். | ச.த.பொன்னரசு<br>கோ.சண்முகநாராயணன் |
| 11 | | சாத்தான்குளம் வடக்கு ஒன்றியம் | சுவாமி சன்னதி தெரு, சாத்தான்குளம். | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>இள.கார்த்திக் |
| 12 | | ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றியம் | தருவைகுளம் | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன்<br>அன்றோ வளர்பிரைட்டன் |
| 13 | 25.06.2025 | திருச்செந்தூர் ஒன்றியம் | நா.முத்தையாபுரம் | ச.த.பொன்னரசு<br>கோ.சண்முகநாராயணன் |
| 14 | | திருவைகுண்டம் மேற்கு ஒன்றியம் | அரசாழ்வார் கோவில் தெரு, திருவைகுண்டம். | வே.குழந்தைவேல்<br>இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 15 | | கருங்குளம் வடக்கு ஒன்றியம் | வல்லநாடு | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>இள.கார்த்திக் |
| 16 | 26.06.2025 | திருச்செந்தூர் நகரம் | காமராஜர் சிலை பின்புறம், திருச்செந்தூர். | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன்<br>செ.சஞ்சய் |
| 17 | 28.06.2025 | ஆழ்வார்திருநகரி கிழக்கு ஒன்றியம் | சேதுக்குவாய்த்தான் | ச.த.பொன்னரசு<br>கோ.சண்முகநாராயணன் |
| 18 | | திருவைகுண்டம் மத்திய ஒன்றியம் | பட்டாண்டிவிளை | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 19 | | திருவைகுண்டம் கிழக்கு ஒன்றியம் | ஏரல் பஜார் | ஆத்தூர் வெ.பாலசுப்பிரமணியன்<br>இ.அன்றோ வளர்பிரைட்டன் |
| 20 | | தூத்துக்குடி மேற்கு ஒன்றியம் | முடிவைத்தானேந்தல் | வே.குழந்தைவேல்<br>மு.செந்தூர்பாண்டி |
| 21 | 29.06.2025 | ஆறுமுகநேரி பேரூர் | மெயின் பஜார், ஆறுமுகநேரி. | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>இள.கார்த்திக் |
| 22 | | சாத்தான்குளம் மத்திய ஒன்றியம் | முதலூர் | செந்தூர் ஜெ.பாலகிருஷ்ணன்<br>இள.கார்த்திக் |
| 23 | | கருங்குளம் தெற்கு ஒன்றியம் | தெற்கு காரசேரி | ச.த.பொன்னரசு<br>கோ.சண்முகநாராயணன் |

தூத்துக்குடி

நாள் : 17-06-2025





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (18.6.2025) முகாம் அலுவலகத்தில், கழக மகளிர் அணி மாநில சமூக வலைதள பொறுப்பாளர் டாக்டர் யாழினி தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.






தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் தென்காசியில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் சுந்தர மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மண்டலப் பொறுப்பாளரும் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தொகுதி பார்வையாளர்கள் கலைக் கதிரவன், நௌஷாத், கணேஷ்குமார், ஆதித்தன் ஆகியோர் உள்ளனர். முன்னதாக புதிதாக கட்டப்பட்ட மாவட்டக் கழக அலுவலகத்தை கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. திறந்து வைத்தார்.

## 2025 - 2026 ஆம் கல்வியாண்டிற்கான
# சட்டக் கல்வி சேர்க்கையில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு ஒதுக்கீடு ஆணை வழங்கல்!
## நீர்வளம் - சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூன் 19-

நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரை முருகன் தலைமையில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம், தரமணி, கலையரங்கில் நேற்று முன்தினம் (17.06.2025), 2025-2026-ஆம் கல்வியாண்டிற்கான சட்டக் கல்வி சேர்க்கையில் தேர்வு பெற்ற மாண வர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகள் வழங்கும் நிகழ்வும், சூரிய மின்சக்தி நிலைய தொடக்க விழாவும் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பொழுது நீர்வளம் மற்றும் சட்டத் துறை அமைச்சர் துரைமுருகன் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் சீர்மிகு சட்டப்பள்ளி 5 ஆண்டு ஒருங்கிணைந்த B,A. LL.B. (Hons.), BBA.LL.B. (Hons.), B.Com.LL.B. (Hons.) & B.C.A.L.L.B (Hons,) சட்டப் படிப்புகள் மற்றும் தமிழ்நாட்டில் அமையப் பெற்றுள்ள இணைவு பெற்ற சட்டக் கல்லூரிகளின் 5 ஆண்டு B.A.L.L.B சட்டப் படிப்பிற்கான இந்த கல்வியாண்டின் சட்டக்கல்வி சேர்க்கையில் 10.06.2025 அன்று பல்கலைக் கழக இணையதளம் வாயிலாக வெளியிடப்பட்ட தரவரிசை பட்டியலின்படி மாணவர்களுக்கு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கியதோடு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழக வளாகத்தில் சூரிய மின்சக்தி நிலையத்தினையும் தொடங்கி வைத்தார்.

மேலும், அமைச்சர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில் தற்பொழுது சட்டப்படிப்புகளில் பலமாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது மூன்றாண்டு Hons. Class இவையெல்லாம் வந்திருக்கிறது. இப்பொழுது அரசு பள்ளியில் படித்து 98, 99 மற்றும் 100-க்கு 100 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள் இப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்துள்ளார்கள். அப்பொழுதெல்லாம் தனியார் கல்லூரிகளில் சேருவதற்குத்தான் மாணவர்கள் விரும்புவார்கள். ஆனால் தற்பொழுது அரசு கல்லூரியில் சேருவதற்குத் தான் மாணவர்கள் விருப்பம் தெரிவிக்கின்றனர். இந்த மாற்றத்தைக் கொண்டுவந்தவர் நமது தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டத் துறைச் செயலாளர் சி. ஜார்ஜ் அலெக்ஸ்சாண்டர், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் பதிவாளரும் சட்ட சேர்க்கைக் குழுவின் தலைவருமான பேராசிரியர் கௌரி ரமேஷ், சட்ட சேர்க்கைக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ரஞ்சித் ஓமன் ஆபிரகாம், சீர்மிகு சட்டப்பள்ளியின் புல முதன்மையர் பேராசிரியர் வி. பாலாஜி மற்றும் வளாக இயக்குநர் எஸ்.கே.அசோக் குமார் மற்றும் சட்டப் பல்கலைக் கழக உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மற்றும் பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் ஆகியோர் சேலம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சமுதாயக் கூடத்தில் நேற்று முன்தினம் (17.06.2025) நடைபெற்ற பால் உற்பத்தியாளர்களுக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் பொது மேலாளர் / மாவட்ட வருவாய் அலுவலர் ப.குமரேஸ்வரன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர்ராஜ்குமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) திருமதி ம.வாணி ஈஸ்வரி, மாநகராட்சி துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி உட்பட தொடர்புடைய அலுவலர்கள், பால் உற்பத்தியாளர்கள் உள்ளனர்.